இணைப்பு II.

(254-ம் பக்கத்திலுள்ளள உடுக்குறியிட்ட வினா எண் 268-க்கான விடையைக் காண்க.)

(அ) சட்டங்களை மொழி பெயர்க்கும் பணிக்கென்று அரசினால் நியமிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமானது, 1–5–1976 முதல் 15–10–1981 வரை 161 மத்தியச் சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றது. இவற்றில் 16 மத்தியச் சட்டங்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன.

(ஆ) உயர்நீதி மன்றத்திற்குக் கீழமைந்த உரிமை வழக்கு மற்றும் குற்ற வழக்கு நீதிமன்றங்களில் தீர்ப்பு மொழியாகத் தமிழைக் கொண்டு வருவது என்று அறிவிக்கப்பட்ட அரசின் கொள்கையை ஒட்டியும், இதன் தொடர்பாக அரசு பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்கி நடக்கும் வகையிலும், தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமானது, குற்ற வழக்கு நீதிமன்றங்களில் பொருள் விளக்கத்திற்காக அடிக்கடி வருகின்ற சட்டங்களில் பெரும்பாலானவற்றை மொழிபெயர்த்ததோடு உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்த குற்ற வழக்கு நீதிமன்றங்களில் தீர்ப்பு மொழியாகத் தமிழைக் கொண்டுவருகின்ற திட்டம், 13–11–1976 ஆம் நாளிட்ட எம். எஸ். 191 என்ற எண்ணிட்ட சட்டத்துறை அரசாணையில் அரசினால் நிறைவேற்றப்பட்டது. மிகவும் முக்கியமான உரிமையியல் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, அவற்றின் படிகள் (நகல்கள்) உயர் நீதிமன்றத்தின் கீழமைந்த உரிமைவழக்கு நீதிமன்றங்கள் அனைத்திற்கும் வழங்குவதற்காக உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அரசு வலியுறுத்தியவாறு தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையமானது மற்ற முக்கிய உரிமையியல் சட்டங்களின் மொழிபெயர்ப்புகளையும் வெளியிடுவதற்காக தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவ்வாறு (i) உயக நீதிமன்றத்திற்குக் கீழமைந்த உரிமை வழக்கு நீதி மன்றங்கள், (ii) தீர்ப்பாயங்கள் (Tribunals) மற்றும் (iii) வாடகை வழக்கு நீதிமன்றங்கள், வருவாய்த்துறை வழக்கு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் தீர்ப்பு மொழியாகத் தமிழைக் கொண்டு வரும் திட்டம், 18–1–1982 ஆம் நாளிட்ட எம். எஸ். 9 ஆம் எண்ணிட்ட சட்டத்துறை அரசாணையில் அரசினால் நிறைவேற்றப்பட்டது.